# அதியமானும் ஔவையாரும்

**க.பார்த்தீபன்**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவிலாச்சேரி, கும்பகோணம்

பண்டைத் தமிழரின் வாழ்வியல் களஞ்சியமாக திகழ்வது சங்க இலக்கியம். காதலையும், வீரத்தையும் தம்மிரு கண்களாகக் கொண்டு புலவர்கள் செய்யுட்கள் இயற்றியுள்ளனர். சங்கப் புலவர்கள் சங்ககால மக்களின் வாழ்வியல், அரசியல், பண்பாடு, பழக்க வழக்கங்கள், போர்முறைகள் ஆகியவற்றை வெளிப்படுத்தியுள்ளனர். அவற்றோடு புலவர்கள் அரசர்களோடு நெருங்கிய நட்புடையவர்களாக இருந்தமையை அவர்களது பாடல்கள் சான்று காட்டுகின்றன. அவ்வகையில் புறநானூற்றில் இடம்பெறும் பாடல்களின் வாயிலாக அதியமானும் ஔவையாரும் நட்பின் இலக்கணமாக விளங்கியமை புலனாகிறது. இவ்விருவர் நட்பின் சிறப்பை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

## நெல்லிக்கனி ஈந்தவன்

தொன்மையான பெரிய மலையின் பிளவிடத்தில் அரிதான உச்சியில் சிறிய இலைகளையுடைய மரத்திலிருந்து கொய்த அரிய நெல்லிக்கனியை அதியமான் பெற்றான். அக்கனியானது பல ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு கனியை மட்டுமே தரும். அத்தகு தன்மையுடைய கனியை அதியமான் தான் உண்ணாது தம்மீது மிகுந்த அன்பு கொண்ட ஔவைக்கு ஈந்தான். அதனைப் பெற்று உவந்த ஔவை,

**“வளம்படு வாய்வாய் ஏந்தி ஒன்னார்**
**களம்படக் கடந்த கழல்தொடித் தடக்கை**
**ஆர்கலி நறவின் அதியர் கோமான்**
**போர்அரு திருவின் பொலந்தார் அஞ்சி**
**பால்புரை பிறை முதல் பொலிந்த சென்னி**
**நீல மணியிடற்று ஒருவன் போல**
**மன்னுக பெரும நீயே! தொன்னிலைப்**
**பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட**
**சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது**
**ஆதல் நின்னகத்து அடக்கிச்**
**சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே! (புறம் - 91)**

என வாழ்த்தினார். அதியமான் வெற்றிக்கொள்ளும் வாளை ஏந்தி பகைவரைப் பல போர்களிலே கொன்றழித்த வீரன் என்றும், போர்க்கள வெற்றிக்குரிய பொன்னெரி மாலை அணியும் தலைவன் என்றும் புகழ்கிறார். கிடைத்தற்கரிய நெல்லிக்கனியை தான் உண்ணாது சாதல் நீக்க எமக்கு அளித்த கோமானே! பால் போன்ற வெள்ளிப் பிறை சூடிய திருமுடியும், கருநீலமணி போன்ற கழுத்துமுடைய இறைவனான சிவபெருமான் போல நீடுழி வாழ்வாயாக! என வாழ்த்தும் விதம் இருவரின் நட்பை புலப்படுத்துகிறது நெல்லிக்கனி ஈந்த செய்தியை,

**“நெல்லி அமிழ்துவிளை தீங்கனி ஔவைக்குஈந்த அதிகன்”**

என சிறுபாணாற்றுப்படைப் பாடல் வரிகளும் உணர்த்துகின்றன.

## தூது சென்ற ஔவையார்

தொண்டைமான் என்ற மன்னன் அதியமான் மீது போர் தொடுக்க வந்தான். அதியமான் மற்றொரு போர் செய்து மிகவும் களைப்படைந்திருந்தான். ஆனால் அவனாகப் போருக்கு எழவில்லை. தானாக வரும் போரைத் தடுப்பது குறித்து பலமுறை ஆராய்ந்து பார்த்தான். யாரையேனும் தூதாக அனுப்ப முடிவு செய்தான். செல்கிறவர் அவனுடைய மதிப்பைக் குறையாமலும் பேசவேண்டும். போரையும் நிறுத்த முயல வேண்டும். இவ்விரண்டையும் செய்யவல்ல தூதுவர் யார் என்று பலகாலும் ஆய்ந்த அதியமானுக்கு நல்ல காலத்தின் அடையாளமாக ஔவையார் உடனிருந்தார். அவனுக்காக தொண்டைமானிடம் தூது செல்லத் துணிந்தார். வள்ளுவர் கூறிய தூதின் இலக்கணமாய் அமைந்த பண்புடையவர் ஔவையார்.

இவர் தொண்டைமானிடம் சென்றார். படைச்சேர்த்து வைத்துள்ள செருக்குடன் இருந்தான் தொண்டைமான். பாட்டியாரைக் கண்டவுடன் மிகுந்த உபசரிப்புச் செய்து தன் படைக்கலச்

சாலையை முழுவதும் சுற்றிக் காட்டினான். பாட்டியார் இதனைக் கண்டு அதியமானை மன்னிக்கும்படி வேண்டுவார் என கனவு கண்டான். முழுவதையும் சுற்றிப்பார்த்து வந்த அதியன் தூதுவரான பாட்டியார் தம் கருத்தை ஒரு பாடலாகப் பாடினார். அப்பாடலில்,

**“இவ்வே பீலிஅணிந்து மாலை சூட்டிக்**

**கண்திரள் நோன்காழ் திருத்திநெய் யணிந்து**

**கடியுடை வியன்நக ரவ்வே அவ்வே**

**பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து**

**கொல்துறைக் குற்றி மாதோ என்றும்**

**உண்டாயின் பதங் கொடுத்து**

**இல்லாயின் உடன் உண்ணும்**

**இல்லோர் ஒக்கல் தலைவன்**

**அண்ணல் எம் கோமான் வைந்நுதி வேலே”** **(புறம் - 45)**

என்று பாடியுள்ளார். இதில் தொண்டைமானை நோக்கி ஐயனே! இங்கு உன் படைக்கலச் சாலையில் ஆயுதங்கள் அனைத்தும் பளபளப்புடன் மயிற்பீலி சூட்டப்பட்டு, மலர்மாலை அணியப்பட்டு, வலிய பிடிகள் போடப்பட்டுத் துருப்பிடியாமல் நெய் பூசப்பட்டு உள்ளன. ஆனால் அதியமானிடம் உள்ள படைக்கலங்கள் பகைவரைக் குத்தி நுனி உடைந்து சானைப் பிடிக்க கொல்லன் உலைக்களத்தில் கிடக்கின்றன. மேலும் அதியமான் தன்னிடம் இருப்பின் பலருக்குங் கொடுத்து உதவுபவன். இல்லையாயின் பலருடனும் சேர்ந்து உள்ளதைப் பகிர்ந்து உண்பவன் என்ற கருத்தமையப் பாடினார் அதியன் தூதுவர்.

முதல் மூன்றடிகளில் தொண்டைமானுடைய படைச் சாலையைப் புகழ்வது போலப் பேசினார் புலவர். அவனும் மகிழ்ந்தான். ஆனால் அவன் இதற்கு முன்பு போர் செய்யாதவன் என்பது உட்கருத்து. அடுத்த இருஅடிகள் அதியமானையும், அவன் படைக்கலங்களையும் பழிப்பன போல் உள்ளன. ஆனால் அதியமான் ஓயாது போர் செய்து வெற்றிபெறும் வீரன் என்பதும் குறிப்பால் பெற வைத்தார் புலவர். பிற்பகுதியில் அவன் வள்ளல் தன்மையையும், பிறருக்குத் தீங்கு நினையாதவன் அதியமான் என்பதனையும், அவன் அதிகாரச் செருக்கு அற்றவன் என்பதனையும் உணர்த்தினார். பாடலால் அதியமானின் மதிப்பு உயர்ந்தது. தொண்டைமானின் செருக்கு அடங்கியது. போரும் நின்றுவிட்டது.

**அதியமானின் விருந்தோம்பல்**

அதியமான் ஔவையிடம் கொண்ட அன்பு காரணமாக, அவர்க்குப் பரிசில் அளித்து உடனே போகச் செய்யாமல், அதைத் தருவதில் காலம் தாழ்த்தி வரும் நிலையில் ஔவையார்,

**“ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்**

**பலநாள் பயின்று பலரொடு செல்லினும்**

**தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ!**

**அணிபூண் அணிந்த யானை இயல்தேர்**

**அதியமான் பரிசில் பெறுஉங் காலம்**

**நீட்டினும் நீட்டா தாயினும் யானைதன்**

**கோட்டிடை வைத்த கவளம் போலக்**

**கையகத் ததுஅது பொய்யா காதே**

**அருந்தே மாந்த நெஞ்சம்**

**வருந்த வேண்டா வாழ்கஅவன் தாளே!”**

என பாடினார். அதியமான் ஒருநாளல்ல - இருநாளல்ல தொடர்ந்து பல நாட்கள் பலரோடு சென்று பழகினாலும், முதல் நாள் கண்ட அன்று பழகியதைப் போலவே அன்போடு பழகும் இனியவன் என்கிறார் ஔவை. அவன் பரிசில் தருவதில் காலத் தாழ்த்திலும், தாழ்த்தாவிட்டாலும் யானை தான் வேண்டும்போது உண்ணத் தன் தந்தக் கொம்புகளுக்கிடையே அடக்கி வைத்திருக்கும் சோற்று உருண்டைப்போல, அப்பரிசில் நம் கையில் இருப்பதாகவே நினைக்கலாம் என தன் நெஞ்சுக்கு ஔவை கூறினார். இதன்வழி ஔவையார் அதியமான் வைத்திருக்கும் அன்பும், நம்பிக்கையும், நட்பும் புலப்படுவதை அறிய முடிகிறது.

**நண்பர்க்கு நல்ல அன்பன்**

அதியமான் தன் நண்பர்க்கு இனியவன், பகைவர்க்குக் கொடியவன் என்னும் கருத்தமையப் பாடிய ஔவையார்,

**"ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்**

**நீர்த்துறை படியும் பெருங்களிறு போல**

**இனியை பெரும! எமக்கே மற்றதன்**

**துன்னரும் கடாஅம் போல**

**இன்னாய் பெருமநின் ஒன்னா தோர்க்கே!"** **(புறம் -94)**

என்று புகழ்கிறார். ஊரில் உள்ள சிறு பிள்ளைகளுக்கு, குளத்திற்குக் குளிப்பாட்டுவதற்காக கொண்டு வரும் யானை எவ்வளவு இனிமை உடையதாக, மகிழ்ச்சி ஊட்டுவதாகத் தோன்றுமோ, அதுபோல எம் போன்ற புலவர்களுக்கு மிக இனிமை உடையவன் அதியமான் என்கிறார். ஆனால் அதே யானையின் மதம் எவ்வளவு துன்பம் தருமோ அதுபோல பகைவர்களுக்கு துன்பத்தை செய்ய வல்லவன் என்பதையும் புலப்படுத்தியுள்ளார். அதியமானின் மீது அவர்கொண்ட அன்பும், நட்பும் அவனது புகழைப் பாடுவதன் வாயிலாக உணர முடிகிறது.

**ஔவையாரின் கையறுநிலை**

அதியமான் இறந்த பிறகு நடுகல் நட்டு வழிபடும் நிலையில், அவனின்றி வாழும் நாள் பயனற்றது எனக்கூறி ஔவையார் வருந்தினார். உயர்ந்த சிகரங்களையுடைய தன் நாட்டையே பகைவர்கள் கொடுத்தாலும் பெற்றுக்கொள்ளாதவன் அதியமான். அவன் இல்லாமல் நீங்குகின்ற காலையும், மாலையும் இனி இல்லாமல் போகட்டும் எனக்கூறி ஔவையார்,

**"இல்லாகியரோ, காலை மாலை!**

**அல்லாகியர், யான் வாழும் நாளே!**

**நடுகல் பீலி சூட்டி, நார் அரி**

**சிறு கலத்து உகுப்பவும் கொள்வன் கொல்லோ**

**கோடு உயர் பிறங்கு மலை கெழீஇய**

**நாடு உடன் கொடுப்பவும் கொள்ளாதோனே!"** **(புறம் - 232)**

என்று வருத்தமுடன் பதிவு செய்துள்ளார். இதே போல் மற்றொரு பாடலில் அதியமானின் இறப்பினால் இனி உலகில் பாடிப் பரிசில் பெற வருவாரும் இல்லை. வருவார்க்குத் தருவாரும் இல்லை என்று கலங்குவதை,

**"இனிப் பாடுநரும் இல்லை**

**பாடுநர்க்கு ஒன்று ஈகுநரும் இல்லை"** **(புறம்-235)**

என்னும் பாடல்வழி உணர்த்துகிறார்.

**முடிவுரை**

சங்க இலக்கியங்கள் பல்வேறு செய்திகளை பதிவு செய்துள்ளன. அவற்றுள் அரசர் – புலவர் நட்பு மிகவும் வியப்புக்குரியது. அறிவார்ந்த சான்றோர்களுடன் அரசாளும் மன்னர்கள் அன்பும், மரியாதையும், நட்பும் கொண்டிருந்ததை இலக்கியங்கள் நமக்கு பறைசாற்றுகின்றன. அவ்வகையில் அதியமான் ஔவையார் நட்பு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அதியமானின் வீரம், கொடை, பண்பு நலன் குறித்து ஔவையார் பெரிதும் போற்றிப் பாடியுள்ளார். மேலும் அதியமானின் அவைக்களத்திலே பெரும் மதிப்பிற்குரியவராகவும் விளங்கியவர் ஔவையார். இத்தகு நட்புறவு குறித்து ஆராயும்போது பண்டையத் தமிழரின் உணர்வுகள் பற்றியும் அறிய வாய்ப்பளிக்கிறது.